## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

LIBRARY EASTERN UNIVERSITY, SRI LANKA
23 AUG 2013

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

## HISS 4101 இலங்கை வரலாற்று மூலங்கள் (கி.பி. 1500 வரை)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாளில் இரண்டு பகுதிகளில் மொத்தமாக ஆறு வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரு வினாக்களைத் தெரிந்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

### பகுதி – I

1. பாளி நூல்களில் அடங்கியுள்ள, கி.பி.நான்காம் நூற்றாண்டு வரை வளர்ச்சி பெற்ற வரலாற்று மரபின் மூலங்களையும் அதன் வளர்ச்சிக் கட்டங்களையும் பரிசீலனை செய்க.

2. தீபவம்சம், மகாவம்சம் ஆகியவற்றுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்குக.

3. ஒரு வரலாற்று மூலம் என்ற வகையில் மகாநாமர் எழுதிய மகாவம்சத்தின் குறைநிறைகளை மதிப்பிடுக.

### பகுதி – II

4. கி.பி. 1200 – 1500 ஆகிய காலப்பகுதிக்குரிய இலங்கை வரலாற்றைப் படித்துக்கொள்வதற்கான மூலங்கள் என்ற வகையில் சிங்கள நூல்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

5. பொலன்னறுவையிலுள்ள வேளைக்காறர் சாசனத்தின் முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்க.

6. வரலாற்று மூலங்கள் என்ற வகையில் மேல்வருவோரின் குறிப்புகளின் முக்கியத்துவத்தை விளக்குக.

    1. மெகஸ்தினிஸ்
    2. கொஸ்மாஸ் இந்திகோ பினிஸ்ற்ரஸ்
    3. சா-ஜத ஹுவா
    4. இவுன் பத்தூத்தா

***

# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF ARTS AND CULTURE
## Part III First Semester Examination in Arts and Culture
## (Special Degree in Economics)– 2010/11
## (Jan/Feb 2013)
## ECOS 4101 Advanced Monetary Theory and Policy

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

எல்லா வினாக்களுக்கும் விடை தருக நேரம் – 03 மணித்தியாலங்கள்

---

1. a. "நாணயக்கொள்கை என்பது பொருளாதாரத்திற்குத் தேவையான சரியான அளவு பணத்தை வழங்குவதற்கான ஒரு முயற்சியேயாகும்." விளக்கி விமர்சிக்க.

   (08 புள்ளிகள்)

   b. சந்தைப்பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டைப் பேணுவதில் அரசாங்கத்தின் தலையீடு பற்றிய விளக்கத்தில் பழம்பொருளியலாளர்கள், கெயின்சியவாதிகள் , நாணயவாதிகள் என்போரது கருத்துக்கள் எவ்வாறு வேறுபடுகின்றன? விளக்குக.

   (12 புள்ளிகள்)

   (மொத்தம் 20 புள்ளிகள்)

2. ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் வெளியீடானது நிறைதொழில் மட்ட வெளியீடாகவே அமைந்திருக்கும் என்பதை பழம்பொருளியலாளர்களின் மாதிரி எவ்வாறு உறுதிப்படுத்துகின்றது?

   (20 புள்ளிகள்)

3. "ஒரு பணப் பொருளாதாரத்தில் வீட்டுத்துறையின் சேமிப்பானது இடம்பெற்றிருந்தாலும் சேயின் விதியானது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவே அமைகின்றது." ஆதாரங்களுடன் விளக்குக.

   (20 புள்ளிகள்)

4. a. பேரினப்பொருளியல் ஆய்வுகளில் கெயின்சுக்குப் பின்னர் நிகழ்ந்த அபிவிருத்திகளை சுருக்கமாகத் தருக.

   (08 புள்ளிகள்)

   b. பணவீக்கம் தொடர்பான விளக்கத்தில் கெயின்சிய மாதிரியில் இருந்து புதிய பழம்பொருளியலாளர் மாதிரி எவ்வாறு வேறுபட்டு அமைகின்றது? வரைபட உதவியுடன் விளக்குக.

   (12 புள்ளிகள்)

   (மொத்தம் 20 புள்ளிகள்)

5. "IS கோடானது வெவ்வேறு வருமான மட்ட மற்றும் வட்டி வீத சேர்க்கைகளில் i+g , s+t என்பன சமப்பட்டுக்காணப்படும் பல்வேறு புள்ளிகளை இணைத்து வரையப்படும் ஒரு கோடாகும்." வரைபட உதவியுடன் விளக்குக.

   (20 புள்ளிகள்)